திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 11 நவம்பர் 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 11
நவம்பர் 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

**செயலர்**

ஆசிரியர் **இரா.அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா.சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 381

நூல் மதிப்புரை 383
இரா.சதாசிவம்

ஈண்டிவர்க்கும் உண்டோ இணை! 385
தமிழாகரர் தெ.முருகசாமி

அருளிச் செயல் கவிதைக்கோட்பாடுகள் (4) 386
பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்

பெரியபுராணத்தில் காப்பிய ஒருமை 391
பேராசிரியர் முனைவர். சுப. அண்ணாமலை

திருக்களிற்றுப்படியார் 398
முனைவர் பெ.சுயம்பு

தமிழ் வேலி 411
ஈரோடை அருண்மணி

# இதழ்மணம்

தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள் பாண்டித்துரைத் தேவரைப் போற்றிச் சொல்மாலை புனைந்துள்ளார்கள். வெண்பா அவர் நெஞ்சக் கமலத்திலிருந்து வந்துள்ளது. அன்பெனும் நார் கொண்டு தொகுத்திருப்பதால் சொல்லுக்குச் சொல் தமிழ் மணம் கமழ்கின்றது.

பேராசிரியர் இரா.அரங்கராசன் அவர்களுடைய "அருளிச்செயல் கவிதைக்கோட்பாடுகள்" நான்காம் கட்டுரை இடம்பெறுகிறது. நம்மாழ்வார் அருள் உலகத்தின் முதல்வராகப் போற்றப்படுவதற்குரிய சிறப்பைக் காரணகாரியத்தோடு கட்டுரை எடுத்துரைக்கிறது. பக்தி இலக்கியக்கோட்பாடு குறித்து உலக அறிஞர்கொண்டுள்ள கருத்தும் திவ்யப் பிரபந்த உரை ஆசிரியர்கள்கொண்டுள்ள கருத்தும் ஒத்துச்செல்வதை கட்டுரையில் எடுத்துக்காட்டியிருப்பது இலக்கியத்திறனாய்வாளர்கள் சிந்தனைக்குரியதாகும். நம்மாழ்வாருக்கு "இறைவன் தன்னுடைய கைமுதல் கருதாத இயற்கை இன்னருள்" வழங்கியுள்ளான் என்ற உண்மை பலகால் எண்ணி வழிபடற்குரியதாகும். இலக்கியச்செல்வமும் அருட் செல்வமும் நிறைந்து கட்டுரை படிக்கச் சிந்திக்கத்தூண்டுகிறது.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் எழுதிய "பெரிய புராணத்தில் காப்பிய ஒருமை" என்னும் முதற்கட்டுரை சூலைத்திங்கள் இதழில் வெளிவந்தது. அதன்கண் பன்மையில் ஒருமை என்னும் கோட்பாட்டை சேக்கிழார் வழிநின்று எடுத்துரைத்தார்கள். இவ்விதழில் பெரியபுராணத்தில் காப்பிய ஒருமை என்னும் தலைப்பில் பன்முக ஒருமை குறித்து நுட்பமான செய்திகளை எடுத்துரைக்கிறார்கள். மேலை

நாட்டுத்திறனாய்வாளரின் வழிநின்று பெரிய புராணம் இடையறவு இன்றி ஒத்திசைத்துச் செல்லும் பாங்கை சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் மூவரும் பின்பற்றி இலக்கியம் படைத்திருக்கும் இலக்கிய உத்தியை ஆசிரியர் அரிதின் ஆய்ந்துள்ளார். பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் புராணம் அமைந்துள்ளதிறம் கற்று இன்புறத்தக்கது.

பேராசியர் பெ.சுயம்பு அவர்கள் சைவ சித்தாந்த சாத்திரவரிசையில் முன் தோன்றிய நூல்களில் திருவுந்தியாருக்கு அடுத்து அதன் வழிநூலாகவும் விரிவுரையாகவுமுள்ள திருக் களிற்றுப்படியார் விளக்கும் செய்திகளை விரிவாகச் சிந்தித்துள்ளார்கள். சைவசித்தாந்த சாத்திர தோத்திர நூல்களின் செய்திகளை உள்வாங்கிக்கொண்டு திருக்களிற்றுப்படியார் மெய்ப்பொருட் செய்திகளை பேசும் திறம் கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதோடு நூல்நுவலும் கருத்தையும் ஆசிரியர் சுயம்பு அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளது இறைவுணர்வு என்னும் பயிருக்கு நீர்பாய்ச்சியதுபோல அமைகிறது.

பேராசிரியர் பெ.சுயம்பு அவர்களின் முயற்சியால் கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் பேராசிரியர்கள், முனைவர் இரா.சுதமதி, முனைவர் மா.ஆ.சுகந்தி, விரிவுரையாளர் செல்வி பா.அருள்மனோகரி, செல்வி இ.காளீசுவரி, செல்வி ச.ஸ்ரீமதி, திருமதி இர.சான்சிராணி, திருமதி சி.சொர்ணமாலா ஆகியோர் ஆண்டுச்சந்தா அளித்துள்ளனர். அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

# நூல் மதிப்புரை

*இரா.சதாசிவம்*

இராமலிங்கசுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பா, உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் புலவர் விளக்கவுரையுடன் பத்துத்தொகுதிகளாக இவ்வாண்டு மலிவு விலையில் செம்பதிப்பாக வெளிவந்திருப்பது தமிழ்ப் புத்தக வெளியீட்டு வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

பல்கலைக்கழகம் தமிழக அரசின் உதவிபெற்று பத்துத் தொகுதிகளையும் வெளியிட பத்து ஆண்டுகள் ஆயின. மறுமதிப்பு எதிர்பார்த்து வெளிவராத நிலையில் அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களுடைய பெரும்பொருள் உதவியினால் வர்த்தமானன் பதிப்பகம் பத்துத்தொகுதிகளையும் ரூ.1250க்கு ஒருசேர வெளியிட்டிருப்பது பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

வள்ளலாரின் திருவருட்பா வாழையடி வாழையாக வந்த தமிழ்ப்பக்திச் செல்வத்தைப் பொதுமக்கள் தமிழில் எளிய இனிய நடையில் எல்லோருக்கும் புரியும்படி வழங்கியிருப்பதாகப் போற்றுவது வழக்கம்.

ஆனால் உரைவேந்தரின் திருவருட்பா 'உரையைப் படிக்கும்போது திருவருட்பாவின்கண் அமைந்துள்ள இலக்கியச் செல்வமும் மெய்ப்பொருட் செல்வமும் வறிஞன் புதையல் பெற்றதுபோல உள்ளமும் உயிரும் தளிர்க்கும் வண்ணம் அமைந்துள்ளநயம் தெரிகின்றது. உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்புலவர் புறநானூறுபோன்ற பண்டை இலக்கியங்களுக்கு எழுதிய உரை ஆழமும் நுட்பமும் வாய்ந்து அறிஞர் உலகம் வியந்துபோற்றும் செம்மாப்புடையது. அத்தகைய பெரும் புலவர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய மக்கள் நடையில் எழுதிய நூலுக்கு என்ன புதுமையான உரை எழுதப்போகிறார் என்று எண்ணத்தோன்றும். ஆனால் உரைக்குள் நுழைந்து படிக்கத்தொடங்கிவிட்டால் பண்டை இலக்கியப் பரப்பெல்லாம் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார். புதிய புதிய செய்திகள் அவர் உரையில் காட்சி தருகின்றன.

*"ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்*
*ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் சோதி"*

என்னும் அருட்பெருஞ்சோதி அகவல் அடிகளுக்கு அவர் வரைந்துள்ள உரையைப் பாருங்கள்.

உரை: மன எழுச்சியும் உண்மையுணர்வும் மேனியொளி பொருந்திய உடம்பும் செல்வமும் நல்கியருளிய அருட்பெருஞ்சோதி.

நல்ல நினைவுகளும் சொற்களும் செயல்களும் உளவாதற்கு மனத்தின்கண் எழுச்சி வேண்டப் படுதலின், "ஊக்கமும்", இன்ப வாழ்வுக்கு நல்ல துணரும் உணர்வும் இன்றியமையாமையின் "உணர்ச்சியும்", நோயின்மையும் கட்டுடைமையும் பொருந்திய உடம்பின்கண் அழகொளி சிறந்து விளங்குதலின், "ஒளி தரும் ஆக்கையும்" எடுத்தோதுகின்றார். ஊக்கம் முதலிய மூன்றும் வளமுற நிலவுதற்குச் செல்வம் வேண்டப்படுதலால் ஆக்கத்தை விதந்துரைத்து இவைகள் திருவருளால் உண்டாவன என்றற்கு, "அருளிய அருட் பெருஞ்சோதி" எனக்கூறுகின்றார்.

அவருடைய உரை சொல்லின்சாரம் அறிந்து அறிவுக்கு விருந்தாக நல்வாழ்க்கைக்குரிய நற்பொருளைத் தேர்ந்து தெளிந்து விளக்கிச்செல்வது கற்போர்க்கு இன்பம் பயப்பதாகும். தமிழ் அறிந்தமக்கள் அனைவரும் தங்கள் இல்லம் தோறும் வாங்கிப் பயன்பெறவேண்டிய நல்ல நூல். இத்தகைய அரியமுயற்சியில் அருட்கொடை வழங்கி வரும் அருட்செல்வர் நா.மகாலிங்கம் பல்லாற்றானும் பாராட்டுதற்குரியவர். "இவன் தந்தை என்நோற்றான்கொல்" என்னும் திருக்குறள் தொடர் நினைவுக்கு வருகிறது. இவருடைய தந்தையார் நாச்சிமுத்துக் கவுண்டர் பெரும் செல்வர் என்று அறிவோம். என்ன தவமும் புண்ணியமும் செய்தனரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இவர்கள் இதுபோல வைமுகோபால கிருட்டின மாச்சாரியார் சுவாமிகள் கம்ப இராமாயணத்திற்கு எழுதிய உரையுடன் கம்பராமாயணத்தையும் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு எழுதிய விளக்க உரையுடன் கூடிய பதிப்புகளையும் வெளியிட்டால் தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடப்பாடுடையதாக இருக்கும்.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு"*

# ஈண்டிவர்க்கும் உண்டோ இணை!

*தமிழாகரர் தெ.முருகசாமி*
*காரைக்குடி.*

1. பாண்டித் துரைத்தேவர் பைந்தமிழ் மீனாட்சி
ஆண்டிருக்கும் நாட்டில் அமைத்ததுதான் - ஈண்டிருக்கும்
நாலாம் தமிழ்ச்சங்கம் நற்றமிழ் மாமதுரை
மேலாம் தமிழ்ப்புலமை மேல்.

2. பாண்டித் துரைத்தேவர் பைந்தமிழைப் பாதுகாத்து
ஆண்ட துரைத்தனத்தின் அற்புதத்தை - ஈண்டுரைக்கில்
எண்ணம் இனிக்கும் எழிலார் சுகம்கூட்டும்
உண்ண அமுதும் உவர்த்து.

3. பாண்டித்துரைத்தேவர் பார்புகழ் பைந்தமிழ்க்கு
ஆண்டிருந்த வீட்டை அளித்திட்டார் - மாண்டபுகழ்
மாமோசி கீரர்க்கு மாகவரி வீசிய
மாமன்னன் போல்பெற்றார் மாண்பு.

4. பாண்டித்துரைத்தேவர் பைந்தமிழ்ச் சங்கத்தில்
வேண்டிய மாப்புலவர் வீறுபெற்றார் - ஆண்டிருந்த
ஏடுகளை அச்சில் எடுத்துப் பதிப்பிக்கப்
பாடுபட்ட பாண்டிபுகழ் பாடு.

5. பாண்டித்துரைத்தேவர் பாரில் பிறந்திலையேல்
ஈண்டுத் தமிழ்ச்சங்கம் ஏதென்பேன்? - ஆண்டிருந்த
பாண்டியர் பைந்தமிழைப் பாதுகாக்க வந்தனரே
ஈண்டிவர்க்கும் உண்டோ7 இணை.

# அருளிச் செயல் கவிதைக்கோட்பாடுகள் [4]

*பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்*

உடலும் உறுப்பும்

இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் பன்னிருவராவர் என்று கணக்கிட்டு அறுதியிடப்பெற்றுள்ளது. அவர்களில் பதின்மரைத் தனித்தெடுத்து அவர்கள் அவதரித்த முறையில் வரிசைப் படுத்தினர் திருமால் திருநெறிச்சான்றோர் பெருமக்கள். அவ்வரிசையாவது,

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யனருள்மாறன் சேரலர் கோன் – துய்யபட்ட
நாதன் அன்பர் தாள் தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத் தடைவாம் ஈங்கு.

இவ்வாறு வரிசைப்படுத்தியவர் செந்தமிழ் வேதியர் என்று போற்றப் பெறும் மணவாள மாமுனிகள் (உபதேசரத்தினமாலை,4) மதுரகவியாழ்வாரும் ஆண்டாளும் தனித்து எண்ணப்பெற்று ஆழ்வார்கள் பன்னிருவர் என்றும் கொள்ளப்பட்டது.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாரையே பெருஞ்சிறப்பாளராயும் தலைவராயும் வைணவ ஆசாரியர்கள் மதித்தனர். அவரைக் 'குலபதி' என்று ஆளவந்தார் கொண்டாடினார். நம்மாழ்வாரையே "பிரபன்னஜன கூடஸ்தர்" என்று வைணவ மரபில் போற்றி வருகின்றனர். இத்தொடரின் பொருள்: "இறைவனையே உய்யும் நெறியாகக் கொண்டு அடைக்கலம் புக்க அடியார்களின் குலமுதல்வர்" என்பதாகும். நம்மாழ்வாரையே "அவயவி (உடல்)" என்றும் மற்றை ஆழ்வார்கள் அவயவங்கள் (உறுப்புக்கள்) என்றும் கருதினர். "மற்றைய ஆழ்வர்கள் இவருக்கு அவயவமாயிருப்பார்கள்" என்பர் திருவாய்மொழிப் பேருரையாளர் நம்பிள்ளை. இறையருட்பேற்றுக்கு

இலக்கானவர்களுள் உள்ளொன்றிய முழுமைநிலை எய்தி உலகை உய்விக்க அருமறையை அருளியவர் என்ற காரணத்தால் நம்மாழ்வாருக்கு அத்தகைய தனியிடத்தை அளித்தார் நம்பிள்ளை. அவருடைய கருத்துக்கள் பக்தியிலக்கியக் கோட்பாடுகளாக மிளிர்கின்றன.

இறையருள் ஞானி (The Great Mystic)

நம்மாழ்வார் உலகினரைப்போன்றே மாறிமாறிப் பிறந்தார் ஒருவர். ஆயினும் இறைவன் தன்னுடைய கைம்முதல் கருதாத இயற்கை இன்னருளால் அவர்க்கு 'விசேஷ கடாட்சம்' செய்தருளினான். விசேஷ கடாட்சமாவது, மயர்வற மதிநலம் அருளப் பெறுகை என்று விளக்கப்படுகிறது.

அதாவது, இறையருளால் ஆழ்வார் உண்மையறிவு கைவரப் பெற்றார்; அதனால் மயர்வுகள் அற நீங்கின; பொறிபுலன்களுக்கு அப்பாற்பட்ட உண்மைகள் தெளிவாயின. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற முப்பொருள் உண்மைகளையும் தெளிவாக உள்ளபடி அறிய வல்லவரானார்.

அவ்வாறு அறியவே, இறைவனை 'பிரத்யட்ச சமாநாகார சாக்ஷாத்காரமாகக்' காணமுடிந்தது. அதாவது புலனைந்திற்கும் பிடிகொடாத பெருமானை 'உருவெளிப்பாட்டால்' உள்ளதைப் போன்றே கண்டு இன்பம் எய்தினார் ஆழ்வார் என்பது நம்பிள்ளையின் கருத்து.

ஸாட்சாத்காரம் என்றால் கண்களாற் காண்பது. அஃது இருவகைப்படும். 1. பிரத்யட்ச ஸாக்ஷாத்காரம்

2. பிரத்யட்ச ஸமாந ஆகார ஸாட்சாத்காரம்.

முதல் வகையில், நேருக்குநேர் ஒருவரையொருவர் காண்பது; இரண்டாம் வகையில் நேருக்குநேர் காண்பதுபோல் தோன்றினும் அருகிற் சென்று அணைக்க இயலாததோர் காட்சியாகும். இதனை 'உருவெளிப்பாடு' என்று தமிழ் அகத்துறையிற் கூறப்படும்.

இந்நிலையை 'Vision of Godhead' என்று வருணிப்பார் எல்வின் அண்டர்ஹில் என்ற ஆய்வாளர். இதனைமிக விரிவாக அவரெழுதிய Mysticism (1977) என்ற நூலிற் காணலாம்.

உருவெளிப்பாட்டில் இறைவனைக்கண்டு இன்ப உணர்ச்சி பெற்றவர் ஆழ்வார். இவ்வின்ப உணர்ச்சியே ஆழ்வார் பெற்ற இறைமைக்கலவி ஆகும். அவ்வுணர்ச்சி இடையறவு பட்டால் அது இறைமைப் பிரிவாகும். இக்கலவிக்கும் பிரிவுக்கும் இடையே ஆழ்வார் பெற்றவை அனைத்தும் மன நுகர்வுகளேயாம். இதனை 'மானஸ அனுபவம்' என்று உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆழ்வாருடைய இத்தகைய இறையருள் நுகர்ச்சியை (Mystical Experience) நம்பிள்ளை ஆராய்ந்து கோட்பாடுகளாகத் தொகுத்தளித்துள்ளார். இறையருட் பேற்றாளரின் வாழ்க்கையில் நான்கு நிலைகளை அறிஞர்கள் உணர்த்துகின்றனர். அவை வருமாறு:-

1. உடற்பொறை வெறுப்பு (Purgation of bodily desires)
2. உள்ளத் தூய்மை (Purification of one's will)
3. உள்ளத்துள் ஒளி (Illumination of mind)
4. இறைமைக் கலவி (Unification with Divine)

இவற்றோடு, நீள் இரவுகள் (Darknights of the soul) என்பதையும் உடன் எண்ணுவர்.

நம்மாழ்வாருடைய வாழ்க்கை வரலாறு அவருடைய நான்கு நூல்களே. அவற்றில் ஆழ்வாருடைய அகவளர்ச்சி, இறையருள் நுகர்ச்சி ஆகியவற்றை நுண்ணிதாக ஆராய்ந்து மேற்குறித்த நிலைகள் நான்கும் அந்நான்கு நூல்களில் முறையாக வெளிப்படுவதை நம்பிள்ளை திருவாய்மொழி உரைப்பாயிரத்தில் விளக்குகிறார்.

1. திருவிருத்தம் (உடற்பொறை வெறுப்பு)

நம்மாழ்வாரின் முதல் நூலான திருவிருத்தத்தில்

இறையனுபவத்திற்கு இடைச்சுவராய்ப் பகையாயிருக்கும் உடலின் தொடர்பை அறுத்தருள வேணும் என்று இறைவனிடத்தே இரக்கிறார். இந்நூலின் முதலிலும் முடிவிலும் இவ்வாறு உடல் மீது கொண்ட வெறுப்புணர்வு வெளிப்படுகிறது. இடைப்பட்ட பாடல்கள் இடைவிரவல்களே; தொடக்கமும் முடிவுமே நூலின் பொதுப்போக்கைக் காட்டும் என்பர் நம்பிள்ளை. இதனை 'உபக்ரம உபஸம்ஹார நியாயம்' என்பர் (உபக்ரமம் - தொடக்கம்; உபஸம்ஹாரம் - முடிவு)

இறையருள் வாய்க்கப்பெற்றதும் 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை' (குறள் 345) என்ற நிலை ஆழ்வார்க்கு ஏற்பட்டது என்பதை உரையாசிரியர் விளக்குகிறார்.

## 2. திருவாசிரியம் (உள்ளத்தூய்மை)

இரண்டாவது பிரபந்தம் திருவாசிரியத்தில், ஆழ்வாருடைய மனத்தில் இறைவனுடைய எழில் நலன்கள் உறைந்தன. அதனால் எண்ணங்கள் அவற்றையே பற்றித் தூய்மையாயின. இதனை,

> "ஸம்ஸார ஸம்பந்தமற்று ஒரு தேச விசேஷத்திலே போனால் அனுபவிக்கக்கடவ தன்னுடைய மேன்மையையும் நீர்மையையும் வடிவழகையும் பரப்பற ஏழுபாட்டாலே அனுபவிக்கலாம்படி இங்கேயிருக்கச் செய்தே ஒரு தசா வைசத்யத்தைப் பண்ணிக் கொடுக்க அவ்வழகை அனுபவித்தார்"

என்று நம்பிள்ளை தெளிவுறுத்துகிறார். ஈண்டு, ஸம்ஸார ஸம்பந்தம் - உலகிற் பிறவியெடுத்தல்; தேச விஷேசம் - வைகுந்த மாநகர்; பரப்பற - சுருக்கமாக; தசா வைசத்யம் - தெளிவான நிலை.

'தசா வைசத்யம்' என்பது இரண்டாம் நிலையாகக் காட்டப்படும். *Purification* என்ற தூய்மை நிலையாகும்.

### 3. பெரிய திருவந்தாதி (உள்ளத்துள்ஒளி)

மூன்றாவது பிரபந்தம் பெரிய திருவந்தாதியில், 'இப்படி அனுபவித்த விஷயத்தில் விஷய அனுரூபமான ஆசை கரைபுரண்ட படியைச் சொன்னார் என்பர் நம்பிள்ளை. கரைபுரண்ட ஆசை Illumination என்று கொள்ளத்தக்கது. தசா வைசத்யத்துக்கு அடுத்த நிலையே கரைபுரண்ட ஆசை.

### 4. திருவாய்மொழி (இறைமைக்கலவி)

நான்காவது பிரபந்தம் திருவாய்மொழியில் இந்நிலைகள் படிப்படியாக வளர்ச்சி எய்தி பக்குவம் அடைந்து பரஞானம், பரமபக்திகள் தலையெடுத்து, இறுதிக்கண் ஆழ்வார் அவாவற்று வீடுபெற்று இறைவனடி சேர்ந்தார். இதனை நம்பிள்ளை குறிப்பிடுவது வருமாறு:-

"ஆமத்தை அறுத்துப் பசியை மிகுத்துச் சோறிடுவாரைப் போலே தமக்கு ருசியைப் பிறப்பித்த படியையும் அந்த ருசிதான் பரபக்தி, பரஞான, பரமபக்திகளாய்க் கொண்டு பக்குவமான படியையும் பின்பு பிரகிருதி ஸம்பந்தமும் அற்றுப் பேற்றோடே தலைக்கட்டின படியையும் சொல்லுகிறார்" (ஆமம் - பசியின்மை; ருசி-சுவை; பிரகிருதிஸம்பந்தம் - உடலோடுள்ள உறவு)

இதுவே. இறையருட்பேற்றாளரின் (Mystics) இறுதி நிலையான Unification ஒன்றாதல் என்பதாகும். இந்நான்கு நிலைகளிலும் ஆழ்வார்க்கு இறையனுபவம் பொறுக்கப் பொறுக்கவே அமைந்தது. முதல்நிலையிலேயே இறுதியான பேறு கூடினால், ஆழ்வாரால் அதைத் தாங்கமுடியாது. சிறு குவளையில் கடல் நீரைப் பாய்ச்சினால் அக்குவளை தாங்குமோ? இந்நான்கு நிலைகளையும் முழுதுமாகப் பெற்றுத்தம் அனுபவத்தை வெளியிட்டதால், நம்மாழ்வாரையே ஞானிகளின் தலைவராக உரையாசிரியர் கொண்டாடுகின்றனர். ஆழ்வார்களில் அவயவியாகவும் மற்றை ஆழ்வார்களை, அவருக்கு அவயவங்களாகவும் கருத்துக் கோட்பாட்டை வெளியிட்டனர்.

# பெரியபுராணக் காப்பிய ஒருமை

(Epic unity in Periya puranam)

*பேராசிரியர் முனைவர். சுப. அண்ணாமலை*

## 2. பன்முக ஒருமை

ஆங்கில இலக்கியத்தில் எலிசபெத்தியக் கவிதையைச் சேர்ந்ததும், சுபென்சரின் (Spenser) படைப்புமாகிய 'ஃபெயரி க்வீன்' (Fairy queen) பல கதைகளின் கோவை யாதலில் திருத்தொண்டர் புராணத்தை ஒத்தது, ரோசர் சேல் (Roger sale) என்னும் திறனாளி அதுபற்றி எழுதுவது:

> "நான் 'ஃபெரி க்வீனை' ஒரு கருவை மையமாகக் கொண்டமைந்தது அல்லது உருவகக் கவிதை என்பதைவிட, நாடகமறுதலை எனக் கூறவிழைகின்றேன். உண்மையில் இல்லை யேனும், கொள்கையளவில், அக்கவிதை முடிவற்றது. சுபென்சர் இன்னும் எத்துணையும் கதைகளை விவரிக்க எண்ணியிருப்பினும், அதைச் செய்வதற்கு இக்கவிதையின் சட்டகம் இடந்தரும். இக்கவிதையில், கதைகளைப் பிணைத்துக் கொண்டிருப்பது ஒரு கருத்துக்கொள்கை என்பதைவிட, ஒரு குறிப்பிட்ட மனநிலை என்றலே பொருந்தும். இக்கவிதையைப் படைத்து எத்துணைக் காலமாயினும், அதன் எப்பகுதியைப் படிக்கினும், எத்துணைப் பகுதிகள் படிக்கினும் அதன் அனுபவம் ஒரு தன்மையதாகவே இருக்கும்.

இக்கூற்றுத் திருத்தொண்டர் புராணத்திற்கும் பொருந்துவதாகும். இதிலும் திருத்தொண்டர்களின் குறிப்பிட்ட ஒரு மனநிலை - மனப்பக்குவம் பொதுமையாக இருந்து அவர்தம் வரலாறுகளைப் பிணைத்துக் கொண்டிருக்கிறது. இம் மனப்பக்குவத்தைச் சேக்கிழார் தாமே திறனாய்ந்து, இறைவன் கூற்றாகவும், கவிக்கூற்றாகவும் வெளியிட்டு, அதற்கு 'ஆணையாம் தன்மை' (Authority) சேர்க்கின்றார்.

பெருமையால் தம்மை ஒப்பார்
    பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
    ஊனமேல் ஒன்றும் இல்லார்

அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் பெற்று நின்றார்
இவரைநீ அடைவாய் என்று.

இது இறைவன் நம்பியாரூரர்க்குக் கூறியது. 'தொண்டர்கள் இணையற்ற பெருமையுடையோர். ஆயின் அனைத்தையும் எமக்களித்து வழிபட்டுச் சிவமாந்தன்மை பெற்றோர். மனவொருமைப் பாட்டினால் உலக பாசங்களைத் (பற்றனைத்தையும்) துறப்போர். அதனால் செருக்குறாதார். செயற்கரிய செய்வார். ஆயின் யாரிடத்தும் அன்பு செய்து இனபுறுவார். இதன் பயனாக இம்மை, மறுமை இரண்டும் நன்மையாகப் பெற்றோர், இவர்களை நீ சார்ந்திரு' என்பது இப்பாடலின் (கூற்றின்) கருத்து (ஆணை) இது தமிழகத்தில் சைவநெறியின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு திருப்புமுனை. இதைப்பெற்ற நம்பியாரூரர் அடியார் வணக்கத்தையும் சைவ சமுதாய வளர்ச்சியையும் தோற்றுவித்தார். இது நிற்க. சேக்கிழார் கவிக்கூற்றாகத் தொண்டர்களின் மனப்பக்குவத்தைக் கூறும் பாடல்,

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

புறக்கோலம் வெறுவேடமன்று திருத்தொண்டர்களின் கண்மணி (உருத்தீராக்கம்) மாலையும் கந்தையாடையும் (கந்து - சார்பு, மானத்தை மறைக்கும் சார்பு என்ற அளவில் உள்ள எளிய, பொலிவற்ற ஆடை) சிவபெருமானிடத்து அவர்கள் கொண்ட அன்புநிறைவை எடுத்துக்காட்டும் வெளிப்பாடு, கண்டிகை மார்பில் அசையுந்தோறும், ஆடும் பெருமானின் செம்மலர்த் திருவடி அசைவுகொண்டு வருந்துமே என, அவர்களின் அன்புள்ளம் நெகிழ்ந்து கசிந்துருக, கண்ணீர் மார்பாரப் பொழியும் மழையெனப் பெருகும். அவர் சிந்தை நாயகன் சேவடியை வருடிக்கொடுக்கும்.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

எனத் திருநாவுக்கரசரைப் பற்றிச் சேக்கிழார் பாடுவதைக் காண்க. அதைக் கருதியே, இப்பாடலில்

"ஈர அன்பினர்" என்றார்.

அடியார்கள் செய்வதெல்லாம் ஈசன் பணியே உலகியல் ஆசை ஒன்றும் அவர்கட்கு இல்லை. திருக்கோயிற் பணியும், அடியார் பணியும், மக்கட் பணியும் அவர்கள் கருத்தில் ஈசன் பணியே. அவன் திருவருள் உணர்ந்து செய்வராதலின், அவன் பணியே யாகும். திருஞானசம்பந்தர் மதுரையில் சமணம் மாற்றிச் சைவமறுமலர்ச்சி செய்த அவ்வகையில் மக்கட்பணி செய்தார். 'சமணரோடு வாது செய உனக்குத் திருவுள்ளச் சம்மதமா?' என ஆலவாய் இறைவனைக் கேட்டு, அவன் குறிப்பைப் பெற்றே வாதில் ஈடுபட்டார்.

மாலும் நான்முக னும் அறி யாநெறி
ஆல வாயுறை யும்அண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெயத்திரு வுள்ளமே?

அடியார் ஈசன்பணியை எத்தடை வரினும் நிறுத்தாமல் செய்தனர். அதைச் செய்வதில் எத்தியாகத்திற்கும் முனைந்தனர். ஆதலின் சேக்கிழார் அதனைப் "பாரம்" என்றார். அன்பு பிறர்க்குக் கொடுக்கவே முந்தும், எதையும் வேண்டாது. 'பணிசெய்வதே நிறைவான இன்பம். அது இருக்கும்போது, நமக்கென்று ஒன்றைப் பெற்று அனுபவிக்கப்போவது என்ன? ஆதலின் அடியார் புறத்தோற்றத்தில் வறியவராக இருக்கலாம். ஆனால் அவர் "யாதும் குறைவிலார்'

தமக்கென வேண்டாத விழுப்பம் - ஒருபுறம்; ஈசன் பணி செய்தலில் விடாப்பிடி ஒருபுறம் - இந்த இரண்டிலும் எத்துணைத் தியாகம் அடங்கியிருக்கிறது, எந்த ஆதாரமும் இன்றி அமைதியாக இவற்றைத் தாங்கிக்கொள்ளும் ஆன்ம வீரத்தைக் கூறச்சொற்கள் இல்லை என்று சேக்கிழாரே திகைத்துநிற்கிறார்.

"வீரம் என்னால் விளம்பும் தகையதோ?"

இவ்வாறு கவிக்கூற்றாகவும் இறைவன் வாக்காகவும் கூறப்படும் திருத்தொண்டர்களின் மனப்பக்குவமாகிய ஆன்ம வீரமே அவர்களின் காப்பியத்தில் அவர்தம் வரலாறுகளைப் பிணைத்துக் கொண்டிருக்கிறது;

அவ்வாறாயின், அவ் வரலாறுகளைச் சருக்கம் மாற்றியும், சருக்கத்தினுள்ளே இடம் மாற்றியும் அமைத்தாலும் சிதைவு நேராது எனக் கருதற்க. முன்பு குறிப்பிட்ட ரோசர்சேல், "ஃபெயரிக்வீன்" பற்றி மேலும் கூறுவதைக் காண்போம்.

"பிரிட்டோமார்ட் என்பாளின் கதை தனியாகவும், டேம்சின் பிரபுவினது கதை தனியாகவும் உள்ளமை பற்றியும், முன்னவளின் கதையில், ஜாயசுக் கோட்டை நிகழ்ச்சி தனியாகவும், அதற்குப்பின் ஆமுரட் என்பாளைப் பிரிட்டோ மார்ட் மீட்ட நிகழ்ச்சி தனியாகவும் உள்ளமை பற்றியும், இக்கவிதை 'ஏதோ, அள்ளித் தெளித்த கோலம்' அன்று. மிக நீண்டதாய், நெடுகிலும் தொனி சமநிலையுடையதாய், கூறியது கூறல் அமைந்த நிகழ்ச்சி விவரிப்பு உடையதான இக்கவிதை சந்தித்தொடர்ச்சியால் பிணைக்கப்பட்டிருக்கிறது.

தண்டியலங்காரமும் பெருங்காப்பியம் "சந்தியில் தொடர்ந்து சருக்கம் முதலிய பகுதிகளை உடையதாதலை இன்றியமையா இலக்கணமாகப் பேசும், நிகழ்ச்சித் தொகுப்பு வைப்புமுறை யாதோ ஒரு வகையில் தருக்கமுறைத் தொடர்புடையதாதலே சந்தித் தொடர்ச்சி (Sequance)

ரோசர் சேலின் கூற்றுப்படி, "ஃபெயரிக்வீனின்" கதைகளை ஒரு குறிப்பிட்ட முறையில் தொகுத்த வைப்புமுறை சந்தித் தொடர்ச்சி உடையதாய்க் கவிதைக்கு ஒருமை Unity of action வழங்குகின்றது.

திருத்தொண்டர் புராணத்தில் ஒரு வைப்பு முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதைச் சேக்கிழார் கூறுகின்றார்.

"தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்த லுறுகின்றேன்"

என, தாம் நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் உள்ள வைப்பு முறையைப் பின்பற்றியமையைக் கூறுகின்றார். திருத்தொண்டத் தொகையை மேற்போக்காக நோக்குமிடத்து, அதன் பதினொரு பாடற்கண்ணும் முதலடியாராகத் திருக்கோயிற்பணி (பாடும் பணி உட்பட) செய்தவரே இடம்பெறுதலைக் காண, அந்நூலை ஆழ்ந்து நோக்கின், நம்பியாரூரர் கையாண்ட வைப்புமுறை

சந்தித்தொடர்ச்சி உடையதாதல் வேண்டுமெனத் தெரியவருகிறது. அவர் 62 தனியடியார் பெயர்களை மட்டுமே பெரும்பாலும் கூறியிருப்பினும், அவர்களுள் ஒன்பதின்மர்க்கு, அவர்தம் வாழ்க்கைப் பண்பு, கொள்கையிற் கொண்ட உறுதிப்பாடு, அதைக்கடைப்பிடித்தலில் காட்டும் வீரம் ஆகியவற்றுள் ஒன்றினைப் புலப்படுத்தும் அடைமொழி புணர்த்துப் பெயர் கூறுகின்றார். "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்", "கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்" என்பன சில சான்றுகள். இவ் அடைமொழிப் புணர்ப்பு, அவர் கையாண்ட சந்தித்தொடர்ச்சி எதை மையமாகக் கொண்டதென்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது.

சேக்கிழார் இக்குறிப்பைக்கொண்டு, தாம் அரிதின் முயன்று திரட்டிய அடியார்களின் வரலாறுகளில், தமது உளவியல், வாழ்வியல், அருளியல் துறையாய்வு வன்மையால் ஒவ்வொரு அடியாரின் வாழ்க்கைப் பண்பு, கொள்கை, கடைப்பிடி என்பவற்றை ஆய்ந்து வெளிப்படுத்தி, நம்பியாரூரர் கையாண்ட சந்தித் தொடர்ச்சியை நியாயப்படுத்தியதோடு, தமது காப்பியத்திற்கும் ஒருமை வழங்கினார். உண்மையான் நோக்கின், திருத்தொண்டர் புராண ஒருமையமைப்பில் மூவரின் உழைப்பும் இறைவன் அருள்வண்ணமும் இணைந்துள்ளன. அம்மூவர், நம்பி ஆரூரரும், நம்பியாண்டார் நம்பியும் (திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய அருளாளர்) சேக்கிழாருமாவர்.

இவ்வைப்பு முறையில் உள்ள சந்தித் தொடர்ச்சியை, அடுத்தடுத்துள்ள இரண்டு அல்லது பல அடியார்களின் வரலாறுகளை ஒப்புநோக்கியும் உறழ்ந்தும் நோக்குதலால் அறிய முற்படலாம். அதன் முதற் கூறுபாடாக அதன் முகமாகத் (Introduction) திருநகரச் சருக்கம் உள்ளது. இப்பகுதியில் மனு நீதிச்சோழன் வரலாறு கூறப்பெறுகின்றது. இப்பெயர், மனுநீதியின் அடிப்படையறத்தைப் பின்பற்றியமையால் அம்மன்னனுக்கு வழங்கிய சிறப்புப்பெயர். அவ்வடிப்படை யறமாவது மன்னுயிர்கட்கு இடையே வேறுபாடு காட்டாமையாகும். இதனை அவன் பின்பற்றியமை, தனக்கு நேர்ந்த சோதனையை அவன் எதிர்கொண்ட பான்மையால் விளங்கும்.

அரசியலின் பாதுகாவல், மக்கட்குத் தீமையோ, கேடோ

வருங்கால் காத்தல் மட்டுமன்று; முன்னெச்சரிக்கைச் செயல்முறைகளால், அவற்றால், முன்னதாக உண்டாகும் அச்சத்தைத் தீர்க்கவேண்டும். "உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி கறங்கு தெண்டிரை வையகம் காக்கும்" என்ற பாதுகாப்புணர்ச்சியுடன் மக்கள் தம் வாழ்வில் ஈடுபட வேண்டும்.

மாநிலம்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பா னல்லனோ?

- இது மனுநீதிச் சோழனது அரசியற் கொள்கை.

பாதுகாப்பில் மக்களும் பங்குகொள்வர். நெருங்கிவரும் கேட்டினை, அவர்கள் கண்டும் முன்னுணர்ந்தும் தம்மைக் காத்துக்கொள்வர். ஏனை உயிரினங்கள் காட்சி மட்டுமே பற்றுக்கோடாய்க் கொண்டு, கேட்டினின்று விலகமுயலும். இங்ஙனமாதலின், முன்னுணரா மாந்தரும் உயிரினங்களும் கேடுற விடுவது ஆட்சிக்கு அழகா? மனுவேந்தன், "மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம் கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன்" என்கின்றார் சேக்கிழார். ஆவி என்பது உணர்வு பாதுகாவல் வெறும் இயந்திரகதியில் அன்றி, உணர்வுடையதாதல் வேண்டும் என்பது அவன் செயல்முறை.

அவன்மகன் வீதிவிடங்கன் தேரேறிச் சென்றபொழுது, ஓர் இளம் பசுங்கன்று அத்தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு இறந்தது. தாய்ப்பசு அளவற்ற துயரங்கொண்டு கண்ணீர்வார அரண்மனைக் கடைத்தலை சென்று, ஆங்கிருந்த ஆராய்ச்சி மணியை ஒலித்தது.

இளவரசன் மீது குற்றமில்லை என்பது தோன்ற அமைச்சன் கூறிய அமைதியையும், இளவரசனைப் பிராயச் சித்தம் செய்விக்கலாம் என்ற தீர்வையும் மன்னன் ஏற்கவில்லை. "பிராயச்சித்தம் செய்தால், பசுவின் துயரத்திற்கு அது மருந்தாகுமா? என்மகன் என்பதற்காகப் பிராயச்சித்தம் செய்ய இசைந்து மற்றொருவன் இன்னொருயிரைக் கொன்றால், நான் கொலைத் தண்டனை விதித்தால் அறம் செத்துக்கிடவாதா?" என்று அவன் கேட்டான்.

பரிவாரங்கள், தேர்கள், தேரின் மணியோசை இவற்றின்

ஆரவாரத்தால், கன்று இளவரசனின் தேரைக் கவனிக்கவில்லை என்றால், அவனன்றோ முன்னுணர்ந்து தேரை நிறுத்திக் கன்றைக் காப்பாற்றியிருக்க வேண்டும்? அதைச் செய்யாமையின் அவன் கன்றைக் கொன்றவனே ஆவான்" என்பது மன்னனின் கருத்து.

கன்றை இழந்த பசுவுக்கு மாந்தர்க்கு உள்ள உணர்வு இருந்தமையை எங்குமில்லாத அதிசயமாக அது ஆராய்ச்சிமணியை ஒலித்ததைக் கொண்டு அறிந்த மன்னன் அதற்கு நீதிவழங்கியே தீரவேண்டும் என்று உணர்ந்தான். "நீதிகேட்கிறது இப்பசு இதற்கு நீதிவழங்குவது, அறநெறியின் உண்மையை உணர்ந்தோர்க்குக் கடமையாகும்" என்றான் அவன்.

"........................ அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம் இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் ததுவிளம்பீர்

சிவன் விரும்பும் திருவாரூரில் பிறந்தமையால், அப்பசு உணர்வுடையதாயிற்று. எனவே அறநெறிப்படியும், சிவ நெறிப்படியும் பசுவுக்கு நீதிவழங்கி, இளவரசனுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தான்.

"கடந்த முனிவரும் கடப்பரோ மக்கள்மேற் காதல்" என்பர். ஆனால் மனுவேந்தன் தன் அளப்பரிய ஆன்ம வீரத்தால், சைவ நீதிக்குமுன் மக்கட்பாசம் பெரிதன்று என அதை வென்று நின்றான்.

நீதிக்குமுன் மக்களுயிரும் ஏனை உயிரும் சமமே என நிலைநாட்டும் மனுவேந்தனின் வரலாறு, அனைத்துயிரிலும் அவற்றின் அறிவுக்கு அறிவாகிச் சிவம் உறைதலினாலும் அச்சமத்தன்மையை வலியுறுத்திய இக்காப்பியத்தில், இதனைத் தொடர்ந்துவரும் அடியார்கள் அனைவரும் சிவம் நிறைந்த நெஞ்சினராதலின், சாதி. குல, தகுதி வேறுபாடின்றிச் சமத்துவ சமுதாயமாக உள்ளமையை முன்னறிவித்து அவற்றுக்கு ஏற்ற முன்னுரையாக அமைகின்றது.

# திருக்களிற்றுப்படியார்

*முனைவர் பெ.சுயம்பு*
தமிழ் இணைப் பேராசிரியர்
*ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.*

## சித்தாந்த நூல்கள்

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பழமையானவை. அவற்றின் வேர்ப்பகுதிகளைத் தேவாரம், திருவாசகம் போன்ற சைவ முதற்குரவர்களின் பாடல்களில் காணமுடிகிறது. ஏனைய திருமுறைகளிலும் இக்கருத்துக்கள் ஆங்காங்கே குறிப்புக்களாக இடம் பெற்றுள்ளன.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தொகுப்பாகத் திருவுந்தியாரில் முதலில் காணப்படுகிறது. இந்நூல் மணிவாசகப் பெருமானின் திருவுந்தியாரைப் பெயராகக் கொண்டுள்ளது. எனவே சித்தாந்தத்தை விவரிக்கிற மெய்கண்ட சாத்திரங்கள் பதினாறுக்கும் பிள்ளையார் சுழியாக மணிவாசகப் பெருமானின் திருவாசகம் அமையலாயிற்று எனலாம்.

சைவ சித்தாந்த நூல்கள் யாவும் சுருக்கமாகவும் சுருக்கத்திற்கு விளக்கமாகவும் காணப்படுகின்றன. இந்நூல்கள் சமயக் கருத்துக்களை மக்களுக்குத் தெரிவித்து, அவர்களை வாழ்வில் உய்விக்கவேண்டும் என்ற அருள்நோக்கில் எழுதப் பெற்றவை என்பது பொதுவான எண்ணம். எனினும், தம்மை ஆன்மீக வாழ்வில் மேம்படுத்திய ஆசானைப் பெருமைப்படுத்தித் தமது நன்றிக்கடமையைப் புலப்படுத்தும் நோக்கமும் இச்சாத்திரங்களின் தோற்றத்தில் வெளிப்படாமல் இல்லை. இவைதவிர, தம் புலமையை உலகுக்கு வெளிப்படுத்தும் கருத்தில் சில நூல்கள் எழுதப்பெற்றமையினையும் உணர முடிகிறது. உமாபதி சிவனாரின் சித்தாந்த அட்டகம் சைவத்தின் உயர்வினை வெளிப்படுத்துவதோடு, ஆக்கியோனின் பல்திறப்பட்ட கவிப்புலமை, மெய்ம்மையியல் (Philosophy) புலமைகளையும் புலப்படுத்துகிறது.

## திருவுந்தியார்

திருவியலூர் உய்யவந்ததேவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் (கி.பி.1148) எழுதிய திருவுந்தியார் ஒரு சுருக்கநூல். நாற்பத்தைந்து கலித்தாழிசைகளே இதன் வடிவம். மாணிக்கவாசகரைப் பின்பற்றி, சிறுமியரின் 'உந்தீபற' என்னும் விளையாட்டுப் பாடல் வடிவத்தினை மெய்யியலை விவரித்தற்குரிய இலக்கிய வடிவமாகக் கொண்டுள்ளார்.

திருவுந்தியாரின் பாடல் நடையும் விவரிப்பு முறையும் சித்தர்களின் பாடல்களைத் தழுவிக் காணப்படுகின்றன. உணர்தற்கரிய சித்தாந்தக் கருத்துக்களை இந்நூல் குறிப்பு மொழிகளாகிய படிமங்களைப் பயன்படுத்தி விவரிக்கிறது.

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உந்தையுடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டதென்று உந்தீபற (14)

கள்ள ரொடு இல்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியா மென்று உந்தீபற
வீடும் எளிதா மென்று உந்தீபற (23)

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற (41)

இவைபோன்ற பல பாடல்கள் திருவுந்தியாரில் உள்ளன. இப்பாடல்கள் குருவின் துணையின்றி, தாமே ஒருவர் கற்றுணர்தற்கு அரியவை. இத்தகைய படிம விளக்க முறை திருமூலர் முதலான சித்தர்களின் பாடல்களிலும் ஏற்கனவே இடம் பெற்றவை ஆகும்.

## உய்யவந்த தேவர்

திருக்களிற்றுப் படியார் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் இரண்டாவதாகத் தோன்றியது. இந்நூல் திருவுந்தியார் என்ற நூலின் அருமையை உணர்ந்து, அதனை எளிமைப்படுத்தும் நோக்கில் தோன்றியதாகும். திருவுந்தியாருக்கு வெண்பா வடிவில் (100 பாக்கள்) எழுதப்பெற்று விளக்க நூலாக இது திகழ்கிறது.

திருவியலூர் உய்யவந்ததேவர் சித்தர்களுக்கே உரிய நிலையில் நாடெங்கும் தங்குதலின்றி அலைந்து திரிந்தவர். தமது உள்ளத்தைக் கவர்ந்த ஆளுடையபிள்ளை தேவர் என்பவருக்குச் சைவ நெறியினைக் கற்பிக்கும் நோக்கில் திருவுந்தியாரை எழுதினார். ஆளுடைய பிள்ளையாரோ தம் மாணவர் ஒருவருக்கு உய்யவந்த தேவர் என்ற தம் ஆசிரியரின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். திருக்கடவூரைச் சேர்ந்த அம்மாணவர் ஆளுடைய பிள்ளையின் விருப்பத்தை நிறைவேற்றுமாறு, திருவுந்தியாருக்கு விளக்கமாகத் திருக்களிற்றுப்பட்டியாரை இயற்றினார்.

திருக்கடவூர் உய்யவந்ததேவர் ஆட்டு வாணிகரான இடையர் குலத்தைச் சார்ந்தவர். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவராதலால், இவர் இயற்றியுள்ள நூல் மதித்தற்கு உரியது அன்று என்று உயர் இனத்தவர் அதனை ஏற்க மறுத்தனர். குலம், கோத்திரப் பிரிவுகளுக்கு அப்பாற் சிவநேச அன்பர் சிலர் இந்நூல் தில்லை நடராசர் பெருமான் இருக்கைக்குக் கீழே உள்ள பஞ்சாட்சரப்படியில் வைத்துச் சென்றனர். படியிலுள்ள கல்லாலான களிறு தன் தும்பிக்கையால் இந்நூலைத்தூக்கி இறைவனது திருவடிக்கீழ் வைத்தது. இறைவனது திருவுள்ளத்தால் ஏற்கப்பெற்று, பெருமதிப்புச் செய்யப்பெற்ற இந்நூல், திருக்களிற்றுப்படியின் பெயரையே தனக்கு உரியதாயிற்று.

## திருக்களிற்றுப்படியார்

பதினான்கு மெய்கண்ட சாத்திரநூல்களுள்ளும் திருக்களிற்றுப்படியார் இறைவனால் மதிக்கப்பெற்ற பெருமைக்குரியது என்ற ஒப்பற்ற உயர்வை உடையது. தத்துவராயர் தாம் தொகுத்த பெருந்திரட்டு என்ற நூலில் திருக்களிற்றுப்படியார் பாடல்கள் மூன்றனைச் சேர்த்துள்ளார். வேறு எந்த சாத்திர நூல்களிலிருந்தும் பாடல்களை ஏற்கவில்லை என்பதும் இங்குக் குறித்தற்குரியது.

திருகளிற்றுப்படியார் திருவுந்தியாருக்கு விளக்கநூல். அதன் கருத்துக்களையே அன்றி, மொழிகளையும் மேற்கோளாக

இந்நூல் எடுத்தாண்டுள்ளது. மேலும், திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம் போன்ற முந்தைய சான்றோர் நூல்களின் கருத்துக்களும் இந்நூலில் தாராளமாக ஏற்கப்பெற்றுள்ளன.

**இறைவன்**

ஒவ்வொரு குடும்பத்திலும் தாயும் தந்தையும் தமக்கென விருப்பு, வெறுப்பு அற்றவர்கள். அவர்கள் இருவருக்கிடையேயும் அன்பு உறவை உருவாக்குகிறது. அவ்வன்பு அவர்களைத் தன்னலமற்றவராக்கி, பிறருக்காக வாழ்வோராக ஆக்குகிறது. தாய் தனக்காகச் சமைப்பதில்லை. தன் குடும்ப உறுப்பினர்களின் நலத்திற்காகச் சமைக்கிறார்; குடும்பத்தைக் காத்துப் பரம்பரையைத் தழைக்கச் செய்வதற்காக உண்கிறாள்; உழைக்கிறாள். அவ்வாறே தந்தையும் தனக்காக உழைப்பதில்லை. குடும்பத்திற்காக உழைக்கிறான்.

குழந்தைகளும் பரம்பரையும் நீண்டநாள் வளமுடன் வாழ்வதற்காக அரும்பாடுபட்டு உழைக்கிறான்; செல்வம் சேர்க்கிறான். பெற்றோர் இருவரும் தம் குழந்தைகளைக் காப்பாற்றுதற்காகப் போராடுகின்றனர்.

தங்கள் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கிறவர்கள் பெற்றோர். அக்குழந்தைகள் தவறான வழியில் சென்று வீழ்ச்சி அடையக்கூடாது என்பதற்காக, அவர்கள் தவறும் வேளையில் தண்டனை வழங்குகின்றனர். இத்தண்டனை குழந்தைகளை அழிப்பதற்காக அல்ல; வளமுடனும் நலமுடனும் நிலைத்து வாழவைப்பதற்காக. பெற்றோர்களின் தண்டனை அன்பின் பரிசாகும். குழந்தைகள் நலம் பெறுகின்றனர்; திருந்தி நல்வழியில் வாழ்ந்து புகழ் பெறுகின்றனர்.

இறைவன் அன்பு மயமானவன். அன்பிலிருந்து விளைந்து முதிர்ந்த அருள்வடிவமானவன். அவன் உலக உயிர்களுக் கெல்லாம் தாயும் தந்தையுமாக உள்ளான். அவன் ஒருவனே அவனது அருளே தாயாக விளங்குகிறது. உயிர்கள் அனைத்தும் இறைவனுக்குக் குழந்தைகளைப் போன்றோர்.

உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களைச் சாரும்போது அவற்றின் இயல்புகளை அடைகின்றன. அதனால் விருப்பு, வெறுப்பு என்னும் சமமற்ற பாவனையை ஏற்கின்றன; எனவே இன்பம், துன்பம் என்னும் வேற்றுமை உணர்வினை எய்துகின்றன. அதனால் பிறந்தும் இறந்துமாக உழலுகின்றன.

உயிர்கள் தாமே உணருகிற அறிவு இல்லாமைக் காரணமாக மலங்களையோ இறைவனையோ சார்ந்து அவற்றின் சாயத்தினைப் பெறுகின்றன. அவை இறைவனைச் சார்ந்தால் இறைவனது இயல்பாகிய அன்பு வயப்பட்டு, அதன் முயற்சியால் அன்பு மயமாகின்றன. அன்புமயமான உயிர்களுக்கு விருப்பு, வெறுப்போ இன்ப, துன்பமோ எவ்வித வேறுபாட்டுணர்வும் தெரிவதில்லை. இந்த சமநிலையினை உயிர்கள் எய்துதற்கு இறைவன் தாமே தம் அருள்காரணமாக வந்து உதவுகிறான். இதனைத் தடுத்து ஆட்கொள்ளுதல் என்பர். தீக்குள் விரைகிற குழந்தையைத் தடுத்து அரவணைக்கும் தாயைப் போன்ற நிலை இது.

இறைவன் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி அருள் உருவாகி, உயிர்களுக்கு உதவுதலால் அம்மை, அப்பன் என்று போற்றப்படுகிறான். இதனை,

அம்மையப்பரேவுலகுக் கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் (1)

என்று திருக்களிற்றுப்படியார் குறிப்பிடுகிறது. திருவாசகம் முதலியனவும் 'அம்மையே அப்பா' என இறைவனைச் சுட்டுகின்றன.

இறைவன் குறைவில்லா நிறைபொருள்; குறை வில்லாப் பேரருள்; எங்கும் எக்காலத்தும் நிலைத்த சக்தி. எனவே அவன் உள்ளும் புறமுமாக ஒன்றி எல்லாவற்றிலும் நிறைந்துள்ளான்.

- அம்மையப்பர்

எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர் (1)

உயிர்கள் தாமே உணரும் அறிவு இல்லாதவை; சுதந்திரமாகச் செயலாற்றும் ஆற்றல் அற்றவை. எனவே அவை எடுப்பார் கைப்பிள்ளை.

கைப்பிள்ளையை நல்வழிப்படுத்துவது பெற்றோரின் குறிப்பாகத் தாயின் கடமை. தாய் தனது குழந்தையை ஈடேற்றும் பொருட்டு அதன்மீது அருளைப் பாய்ச்சுகிறாள். அவளது அருள் இன்றேல் குழந்தை நலமாக வாழ இயலாது. அது போன்று இறைவனது அருள் இன்றேல் உயிர்களால் பிறவிப் பிணியை அறுத்து இறைவனது அடி நிழலாகிய பேரின்ப இடத்தை எய்த இயலாது.

வேதங்கள், ஆகமங்கள் போன்ற நூல்களைக் கற்றறிந்த போதிலும் - பல்வேறு சமய நெறிகளை உணர்ந்தபோதிலும் - பல்வகை யோகப் பயிற்சிகளை மேற்கொண்டபோதிலும் உயிர்கள் தம் முயற்சியால் இறைவனை உணர்ந்து தெளிதல் இயலாது. ஏனெனில் இம்முயற்சிகள் யாவும் தான், தனது எனும் ஆணவத்தின் சேர்க்கையால் ஆனவையாகும். இறைவனது அருள் உயிர்கள் மீதுபடிந்தால் மட்டுமே அவனை உணரவியலும்; பிறவித்தளை அறுபட்டுப் பேரின்பம் எய்த வியலும்.

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே – பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு (5)

என்று உய்யவந்த தேவர் இறைவன் தனது சக்தியாகிய அருள் காரணமாக உயிர்களைத் தடுத்தாட் கொள்ளுதலை விவரிக்கிறார்.

உயிர்கள் பருவுரு அற்றவை. அவை ஆணவம் காரணமாகத் தன்முனைப்பெய்தி விருப்பு வெறுப்புடன் வினை இயற்றி, அதன் பயனாகிய பாவ, புண்ணியங்களைச் சம்பாதிக்கின்றன. இவ்வினைப்பயன்கள் துய்க்கப்பெற்றுக் கழித்து ஒழிக்கப்பட வேண்டியவை. எனவே இவற்றைக் கழிப்பது உயிர்களுக்குக் கட்டாயமாகிறது.

வினைப்பயனைத் துய்த்துக் கழிப்பதற்கு ஏற்ற உடல், கருவி, இடம், இன்பம் போன்றவற்றை இறைவன் பேரருள் காரணமாக உயிர்களுக்குக் கூட்டுகிறான். இதனால் பருவுரு அற்ற உயிர்கள் பருவுருவாகிய உடலை எய்துகின்றன.

பருவுரு உடலை எய்திய உயிர்கள் உருவற்ற இறைவனை உணர்ந்து கொள்ளுதல் அரிது. எனவே அவர்களுக்கு அருளுதற்காக இறைவனே மானிட வடிவில் குருவாக வருகிறான்.

இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் நீக்குவதிங் – கென்றால்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் உரை. (7)

குருவின் அருளின்றி உயிர்களால் தாமே இறைவனையும் தம்மையும் உணர்ந்து கொள்ளவோ, பிறப்பிலிருந்து விடுதலை பெறவோ இயலாது. வீடுபேறு என்னும் சிவபதம் அடைகிற நெறி வெறும் கல்வியினால் எய்தப்பெறுவதில்லை. நீண்ட காலமாக இறைவனையும் அவன் அருளும் திறத்தையும் தெளிவாக உணர்ந்துகொண்ட குருமார்கள் தம் அனுபவத்தின் வாயிலாக எடுத்துக்கூறக்கேட்டு உணர்தற்கு உரியது.

சைவ குருமார் பரம்பரை இறைவன் சிவனிலிருந்து தொடங்குகிறது.

என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
என்னறிவில் ஆரறிக என்றொருவன் – சொன்னபடி
சொல்லக்கேள் என்றொருவன் சொன்னான் எனக்கதனைச்
சொல்லக்கேள் நானுனக்குச் சொல் (3)

குருவழியாகவே சிவஞானம் எய்தவியலும் என்பதனைத் திருக்களிற்றுப்படியார் இவ்வாறு விவரிக்கிறது.

குரு இல்லாக் கல்வி பாழ் என்பர். அது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகப் பயனற்றுப்போகும். ஐயந்திரிபற ஒரு மாணவனால் குருவின்றிக் கற்கவியலாது. ஆன்மீகக் கல்வி கல்வித்துறைகளுள்ளே நுட்பமானது; இயற்கையின் விரிந்த ஆழமான இரகசியம் அது. எனவே அதனை நன்கு உணர்ந்து தெளிவதற்கு - நன்கு தேர்ந்த புலமையும் பயிற்சியுமுள்ள நற்குரு தேவை. இதனை,

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தனவசன
மாத்திரத்தை வாய்த்தவளம் வந்துறுமே – ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மையாய் இதனைச் செப்பு (6)

என்று உய்யவந்தார் கூறுகிறார்.

தாமே கற்கும் ஆன்மீகக் கல்வி கடல் நீரை அள்ளி அள்ளி ஒருவர் குடித்தற்குச் சமமானது. அக்கடல்நீரை அள்ளிய மேகம் அதனை மழைநீராக்கி பெய்யும்போது ஒருவர் அதனைக் குடித்து இன்புறுதல் இயலும். இது குருவின்வழியாகக் கற்பதற்குச் சமமாகும்.

ஞானத்தின் பேருரு சுகப்பிரம்மம். அவருக்கும் ஆன்ம ஞானத்தைக் கற்பிக்கக் குரு தேவைப்பட்டார். மிதிலை மன்னன் ராஜரிஷி ஜனகனே சுகப்பிரம்மத்திற்கு ஆன்மீகக் குருவாகி அருளினார் என்பது இலக்கியச் சான்று.

அன்பே சைவம்

நற்குரு இறைவன் அருளால் உயிர்களுக்கு அமைவார். அக்குரு இறைவனை உணர்ந்து வீடுபெறும் நெறிகளை அருளுவார்.

வீடுபெறு நெறிகளாகச் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என்னும் மூவகை நெறிகளைத் திருக்களிற்றுப் படியார் சுட்டுகிறார். இம்மூன்றும் நான் என்னும் ஆணவமாகிய மூலமலத்தை அழிக்கவல்லவை.

சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் மூன்றும் உயிர்களை உய்விக்கும் நெறிகள். எனினும் இம்மூன்றனுக்கும் அடித்தளமாக அன்பு உளது. இவ்வன்பாகிய உள்ள நெகிழ்ச்சி இல்லையேல் இம்மூன்றினாலும் பயனில்லை.

இதனை,

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன் (15)

என்றும்

அன்பேஎன் அன்பேஎன் றன்பால் அழுதரற்றி
அன்பேஅன் பாகஅறி வழியும் – அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான். (55)

என்றும்

உள்ளும் புறமும் நினைப்பொழியில் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் – தெள்ளி
அறிந்தொழிவாய் அன்றியே அன்புடையை ஆயின்
செறிந்தொழிவாய் ஏதேனும் செய் (51)

என்றும் திருக்களிற்றுப்படியார் விவரிக்கிறது.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

என்பார் வள்ளுவர். அன்பு தன்னலமறுப்பைத் தரும். பணிவைத் தரும். இதனால் இன்ப நாட்டமோ துன்ப வெறுப்போ ஏற்படாது. ஆணவம் ஒடுங்கிவிடும். எல்லா உயிர்களையும் இறைவனின் இருப்பிடமாக எண்ணி, அவற்றுக்குத் தொண்டு புரிதலே வாழ்வின் நியதி என்று உணரும் நிலையை அன்பே உருவாக்கும். தன்னை இழந்த உயிர்கள் யாண்டும் எல்லாமாகி நிற்கிற அன்பாகிய இறைவன் ஒருவனையே நினைந்து நினைந்து உள்ளம் உருகும்.

ஒத்த இயல்புடையனவே இணையவல்லவை. இறைவன் அன்பின் உரு. எனவே அவனது திருவடிகளை எய்த வேண்டுமாயின் உயிர்களும் அன்பின் வடிவமாகவே மாற வேண்டும். அவ்வாறு மாறினால் இறைவனை அனைந்து பேரின்பத்தில் திளைத்தல் உறுதி.

அன்புசிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (திருமந்திரம் 270)

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி

என்பொன் மணியினை எய்த வொண்ணாதே (திருமந்திரம்)

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக் கன்பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே (திருநாவுக்கரசர்)

அயரா அன்பின் அரன்கழல் செலுமே (சிவஞான போதம்)

என்பன போன்ற சான்றோர் மொழிகள் யாவும் அன்பினால் அன்றி, உயிர்கள் உய்தல் இல்லை என்பதைப் பறை சாற்றுகின்றன.

**சிவதன்மம்**

சிவனருளை அடைவிக்கிற மூவகை நெறிகளுள்ளும் சிவதன்மத்தை இந்நூலாசிரியர் விவரிக்கும் திறம் விரிவானது; புதுமையானது; முதன்மை நோக்கம் உடையது.

சரியை, கிரியை என்னும் இரண்டும் சிவதன்மங்களாகும். இவற்றுள் சரியை என்பது அகவழிபாடு; கிரியை புறவழி பாடாகும். அகவழிபாட்டின் முதிர்ச்சியாகப் புறவழியாட்டினைக் கருதுவர்.

இறைவழிபாடும் அது தொடர்பான நிகழ்வுகளும் தொண்டுகளும் மெல்வினை எனப்படுகின்றன. இவற்றை மேற்கொள்ளும் சிவ அன்பர்கள் மென்றொண்டர் ஆவர். திருவிளக்கிடுதல், திருவலகிடல், திருமெழுக்கிடல், திருப்பள்ளித் தாமம் சார்த்தல், திருக்கோவில் அமைத்தல் திருவைந்தெழுத்தை நினைத்தல் போல்வன இறைவனுக்குச் செய்யும் வழிபாடுகளாகும். இவையே அன்றி, சிவனடியார்களையும் சிவனாகக் கருதி வழிப்படுதல். அவர்களுக்கு வேண்டுவன செய்தல் போல்வன்வும் மென்றொண்டர்களின் வழிபாட்டில் அடங்கும். இவை மனிதர்களால் சாதாரணமாகச் செய்யத் தகுந்தவை. பெரியபுராணத்தில் வருகிற அப்பூதிஅடிகள், மங்கையர்க்கரசியார், திருநீலகண்டர். போன்றோர் இவ்வகையினராவர்.

மனிதர்களால் செய்தற்கரிய செயலைச் செய்கிற பெரியோராக வன்றொண்டர்கள் காணப்படுகின்றனர்.

செய்தற் கரிய செயல்பலவும் செய்துசில
செய்தற் கரியதனை எய்தினர்கள் – ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்கலாய் இருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

என்று வன்றொண்டர்களின் திறத்தினைத் திருக்களிற்றுப் படியார் விவரிக்கிறது. கண்ணப்பநாயனார், சண்டேசர், மூர்க்கர், அரிவாட்டாயர், சிறுத்தொண்டபத்தன் போன்ற சிவனடியார்களின் வழிபாட்டினை வல்வினையைச் சார்ந்ததாக இந்நூல் விவரிக்கிறது.

பெரிய புராணத்திலும் பிற வரலாறுகளிலும் இடம்பெற்றுள்ள சமூக அமைப்பிற்கும் தனி மனித இயல்புக்கும் பண்பாட்டு விதிகளுக்கும் மாறான செயல்களைச் செய்த சிவத்தொண்டர்களின் செயல்களை நியாயப்படுத்தி, அவர்களின் மீது சார்த்தப்படுகிற பழிகளுக்கு அமைதிகூறும் நோக்கில் மெல்வினை, வல்வினை என்னும் பகுப்பும் விளக்கமும் இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறைவனுக்கு அர்ப்பணமாக்கி, தன்னலமற்றுச் செய்யப்படுகிற கொலை, சூது, களவு போன்ற தீவினைகளும் அறவினைகளாகவே சைவத்தில் கருதப்படுகின்றன. இதனை ஞான நூலின்,

அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே

என்ற செய்தியும் உறுதிப்படுத்துகிறது. இறைவன்பால் அன்பின்றி, ஆணவம் காரணமாகச் செய்யப்பட்டதால் தக்கன் செய்த பெருவேள்வி தீவினை ஆயிற்று. இறைவனுக்கு அன்புடன் விசாரசன்மன் என்றசிறுவன் தனது தந்தையின் பாதங்களை வெட்டிய தீவினை நல்வினையாகக் கருதப்பெற்று, அவன் சண்டேசப் பதவியை அடையக் காரணமாயிற்று.

*சிவதன்மத்தை மெல்வினை, வல்வினை எனப்பகுத்து விளக்குதல் இந்நூலின் தனிச்சிறப்பாகும்.*

திருக்களிற்றுப்படியாரை எழுதிய உய்ய வந்த தேவர் தேர்ந்த புலமையாளர். இதனைத் திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம் போன்ற நூல்களிலிருந்து அவர் தந்துள்ள சான்றுகள் உறுதி செய்கின்றன.

பற்றினுள் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற – பற்றதனைப்
பற்றிவிடில் அந்நிலையே தானே பரமாகும்
மற்றுமிது சொன்னேன் மதி (30)

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் – சார்பு
கெட ஒழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று (34)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது – வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால் (40)

திருவாசக மொழிகளை இந்நூலாசிரியர் எடுத்தாண்டுள்ளார். அதற்கு,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் – கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியாரறிதல் அல்லதுமற்
றாரறியும் அன்பன் றது (52)

என்னும் பாடல் ஒரு சான்று.

தேவாரம் பாடிய மூவரையும் போற்றுகிற இவ்வாசிரியர் திருஞானசம்பந்தரும் அப்பரும் செய்த அற்புதங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டுகிறார். பெண்ணாசை நீங்கப்பெற்றாலே சிவகதி எய்தப் பெறும் என்னும் உண்மையைச் சுந்தரர் வாழ்வு வெளிப்படுத்துவதாகச் சுட்டுகிறார். இவர்களே அன்றி, சிறுத்தொண்டர், மூர்க்கர் சேந்தன் போன்ற பல அடியார்களும் இந்நூலில் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளனர். இவ்வகையால்

திருக்களிற்றுப்படியார் பெரியபுராண நிகழ்ச்சிகளைப் பெருமைப்படுத்தும் நூலாக விளங்குகிறது.

திருவுந்தியாருக்கு இந்நூல் விளக்க நூல். ஆதலால் அதன் கருத்துக்களேயன்றிப் பாடலடிகளும் பரவலாக இதில் காணப்படுகின்றன.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னும் – கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப்பழம் பழுக்கும்
ஏகக்கொடி எழுங்காண் இன்று (93)

திருக்களிற்றுப்படியார் சைவ சித்தாந்தத்தை விளக்கிக்கூறுகிற நூல். தனது ஆசிரியரைப் போற்றும் வகையில் இதனாசிரியர் இந்நூலை ஓர் வழிநூலாக இயற்றியுள்ளார். இதில் முந்தைய நூல்களின் கருத்துக்கள் மட்டுமன்றி, மொழிகளும் எடுத்தாளப் பெற்றுள்ளன.

## தமிழ்ச்சங்கத் தோற்றம்

1901 வருடம் செப்டெம்பர் மாதம் 14 உ யன்று மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் கூட்டப்பெறுஞ் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. கும்பகோணம் ஸ்ரீ உ.வே.சாமிநாதஐயர், சேது சமஸ்தான வித்வான் ரா.இராகவையங்கார், வை.மு. சடகோபராமாநுஜாசாரியர், வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், சோழவந்தான் சண்முகம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருமயிலைச் சண்முகம் பிள்ளை முதலிய தமிழ்ப் பெரும் புலவர்களும், தேவரவர்களது அவைப்புலவர்களும் தென்னாட்டுச் செல்வர்களும் அறிஞர்களும் முதல் நாளே மதுரைமாநகரில் வந்து குழுமினர். ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்களுடன் அத்திருவிழாவைச் சிறப்பிக்க விஜயம் செய்திருந்தனர். பிரபவ வருடம் ஆவணி மாதம் 31உ பானு வாரமும் சித்திரா நக்ஷத்திரமும் கூடிய நன்னாளிலே, பகல் 1.30 மணிக்குமேல் 2.45 மணிக்குள் தனுர் லக்நத்தில், சேது வேந்தர் திருமுன்பும் பேரறிஞரின் குழாத்திடையும் மதுரைத் தமிழ்ச்சங்கம் தாபிக்கப்பெற்றது.

**மு.இராகவையங்கார்**

# தமிழ் வேலி

ஈரோடை அருண்மணி

(முன் இதழ் தொடர்ச்சி)

**அந்தணர் குணம்:**

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான் - திருக் : 30

என்று செந்தண்மையுடைய செம்மல் உள்ளமுடையவராக வள்ளுவப்பெருந்தகையாளர் காட்டுகின்றார். மேலும் கடவுள் வாழ்த்திலேயும், செங்கோன்மையிலும் முறையே

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது -1.கடவுள்:8

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் -55, செங்கோன்மை: 3

அந்தணர்தம்மை அறத்தொடு சேர்த்தே கூறுகின்றார் வள்ளுவர். எனவே இவர் அறங்கிடந்த சிந்தையராவர். இறைவனிடமிருந்து அருமறை பல கற்றதோடு நூல் செய்யும் பெற்றியுங் கொண்டிலங்கினர் என்பது ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து" எனவரும் கலித்தொகைப் பாடல் அடியால் அறியப்பெறுவதாகும். இறைவன் அந்தணர்க்கே அருமறைகள் பலவற்றையும் பகர்ந்தார்; வேறெவர்க்கும் பகர்ந்தாரிலர்.

திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாதரம் ஆகிய நிகண்டுகளும் அந்தணர் என்பாரை அறத்தோடும் அறிவோடும் பிணைத் தே "அறிவாழியந்தணன்", "அருளாழிவேந்தன்" என்றே அந்தணன் என்னும் சொல்லுக்குப் பொருளுரைக்கின்றன.

திருத்தக்கதேவரும் தோலாமொழித்தேவரும் சமணசமயத்த வராயினும் அவர்தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வளம் பெருக்கியது யாவுமே தமிழ் மண்ணிலேயே ஆகும். அவர்தம் காலத்திலே அவர்தம் இடையே அருளாளராகத் தோன்றித் தொண்டாற்றிய அந்தணர்தம் இயல்பினை உணர்ந்தே விருசப தேவரைக் குறிப்பிடுகையில், திருத்தக்க தேவர், "ஆதிக்காலத்து அந்தணன்" (சீவ.366) என்றும், தோலாமொழித்தேவர் "ஆழி அற

அரசே" (சூடா.1913) என்றும் குறித்துள்ளனர். அந்தணர் என்பார் ஆரியராகவோ, பிறராகவோ இருந்திருப்பாரேயானால், விருசப தேவரைக் குறிக்க அந்தணர் என்னுஞ்சொல்லை ஆண்டிருப்பரா என்பதை நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இன்றும், திருவள்ளுவர்தம் தவச்சாலை நிறுவி மக்கட்குப் பாடாற்றியும், நூல்பல யாத்தும் வருகின்ற தமிழ்க்கடல் இரா.இளங்குமரனாரை யன்றோ செந்தமிழ் அந்தணர் என்று நாம் பாராட்டுகிறோம். அந்த வழியில் தொல்காப்பியர் காட்டும் அந்தணர்பற்றிக் காண்போம்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் தன் நூலைத் தொடங்கும்போதே "நூன்மரபு" என்று தலைப்பிட்டுத் தொடங்குவர். பின்னரும் "மொழிமரபு", "தொகை மரபு" "விளிமரபு" பற்றி விரித்தோதி "மரபியல்" கொண்டே தன் நூலினை நிறைவுசெய்கிறார். "மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்" என்றே மரபியலின் முதல் நூற்பாவைத் தொடங்கி

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை –92
மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும் –93
மரபுநிலை திரியா மாட்சிய வாகி –95

என்று பொருளதிகாரம் மரபியலிலே மாட்சிமைபற்றிப் பெரிதாகப் போற்றியுரைப்பர். இவ்வாறாக மரபிற்கே முதன்மையளித்துள்ள தொல்காப்பினார், தமிழ் மரபிலே தோன்றி மரபினின்று வழுவாத நற்றமிழ்ச் சான்றோரையன்றிப் பிறரைத் தம் நூலிலே பேணிச் சிறப்பியாரன்றோ. எனவே அந்தணர் என்பாரும் தமிழரே. அதற்கு நற்றமிழ் நல்லாரை

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தபநாடி
அளபின் கோடல் அந்தணர் மறைத்தே" -சொல்.3 பிறப்.20

என்று அந்தணரை முதன்முதலாக அவர்தம் அருமறையுடன் சேர்த்தே அறிமுகப்படுத்துவர், தொல்காப்பியர். இங்கு மறையென்றது உயிர்காக்கும் மந்திரங்கள் அடங்கிய நூலையே ஆகும். மரத்தினது கோட்டத்தினைப் போக்குகின்ற தெற்றுநூலே போன்று மாந்தர்தம் மனக்கோட்டத்தைத் தீர்க்கவல்ல

மாண்புடையதே நூல் என்பர் பவணந்தியடிகள். செம்பொருள் உரைபப்து நூலென்றால் 'ஆருயிர் காப்பது அருமறை' ஆகும். மந்திரத்தின் எழுத்தும் சொல்லும் இசை பிசகாமல் துல்லியமாக இசைத்தல் வேண்டும். அவ்வாறமைந்தாலே மந்திரம் பயன்தரும் என்பதாலேயே "அகத்தெழு வளயிசை அரில்தப நாடி" குற்றமற ஆராய்ந்து அளிபு அறிந்து அவ்வளபுப்படி இசைத்தலே அந்தணர் மறையின்கண் காணப்படுவதாகும் என்று ஒவ்வொரு சொல்லையும் ஆய்ந்து ஓர்ந்து கோத்தமைத்துள்ளார் தொல்காப்பியனார். இதே கருத்தின் அடிப்படையிலேயே நக்கீரர் திருமுருகாற்றுப் படையிலே

மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்

- திருமுரு:95-96

என்று மரபினைக் கருத்திற்கொண்டு வகுக்கப்பெற்ற மந்திரத்தின் முறைப்படியே அந்தணர் நிகழ்த்துகின்ற வேள்வியினை முருகப்பெருமானது ஆறு திருமுகங்களிலே ஒருதிருமுகம் ஆராய்ந்து நோக்கிய வண்ணம் உள்ளதாம். "அரில்தப நாடி" எனத் தொல்காப்பியனார் கூறியிருத்தலையும், "மரபுளி வழாஅ" என நக்கீரர் போற்றி யுரைத்திருப்பதையும் ஒப்புநோக்கிச் சிறப்பினை அறிக. மேலும் முரஞ்சியூர் முடிநாக ராயர்.

அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கின் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே

-புறம்:2:22-24

என்று மண்ணுயிர்களின் பொருட்டாக உயிர்ப்பிச்சையும் மடிப்பிச்சையும் வேண்டி இரந்துநின்று வேட்பதே வேள்வியாகும் என்னும் பொருள்கொள்ளவே "அருங்கடன் இறுக்கும்" என்றார். அவ்வாறே முருகப்பெருமானும், உயிர்களின் நலன் கருதிச் செய்யப்பெறும் வேள்வி செவ்விதாக அமைதல் கருதியே, பரிவுடன் நோக்கியவண்ணம் இருப்பதாக நக்கீரர் உரைத்தார். பின்னரும் நல்லந்துவனார் கலத்தொகைக்கண்

அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செவ்வழல் தொடங்க – வந்ததை (கலி.119)

என்று அந்தணர் செந்தீ வளர்த்து வேள்விநடத்துங் காட்சியைக் காட்டுவர். இவ்வாறு காலை அந்தியும் மாலை அந்தியும் எரிவளர்த்து வேள்வி நிகழ்த்தியருங்கடனிறுக்கும் அந்தணர்தம் தோற்றத்தைப்பற்றித் தொல்காப்பியனார்

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய (மரபி:71) என்பர்.

காட்சிக்கு எளியராகக் கையிலே அருமறையும் நீர்க்கரகமும், முத்தலைக்கோலும் மணையும் கொண்டு துறவுக்கோலத்தில் நீத்தார் பெருமைசால அகங்குளிரக்காட்சி தருகின்றனர். இத்தகு சான்றோரின் தகுதியும் திறமும் எத்தகையன என்றால், தொல்காப்பியர்

அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே – மரபி:73
அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே – மரபி:83 என்பர்.

மன்னர்க்கு ஒத்த தகுதியும் திறமும் படைத்திருந்தனர். மன்னரைப் போன்றே அந்தணர் தாமும் தமக்கெனத் தனியே கொடி, குடை, சின்னம் முதலியவற்றைக் கொண்டிருந்தனர். மன்னரும் அதை மறுத்துத் தடுத்தாரிலர் என்பதைத் தொல்காப்பியனார் தெளிவுபடுத்துகிறார். "காட்சிக்கு எளியன்" என மன்னனை வள்ளுவர் காட்டியதுபோன்றே அந்தணரும் காட்சிக்கு எளியராக விளங்கியபோதிலும் மன்னரைப் போலவே திறம்படைத்தவராகவும் மக்களின் மதிப்பிற்குத் தக்கார்களாகவும் விளங்கினர். எண்பதத்தராகி உயிர்களிடத்துப் பரிவு மிகவுடையராகி உயர்நெறியராகி விளங்குதலாலே, இறையாம் சிவபரம் பொருளும்.

"ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து
கூறாமல் குறித்ததன்மேல் செல்லுங் கடுங்கூலி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய் கேளினி" -கலி:1:1-4

என்ற அந்தணர்க்கே, அருமறைகள் பலவற்றையும் பகர்ந்த செய்தியினைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கலித்தொகையிலே குறிப்பிடுகின்றார்.

"தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்"

-கம்பர். அகத்தியபடலம்.

என்று கம்பர் கண்டுரைத்தவாறு அகத்தியர்க்குத் தமிழ் உரைத்தும்

கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே -திருப்புகழ்

என அருணகிரிநாதர் சொல்வதுபோன்று முருகன் பேசிய கொஞ்சுதமிழ் கேட்டும் பாணபத்திரரர்க்குப் பொருள்வேண்டிப் பரிந்துரைத்துச் சேரமான் பெருமான் நாயனாருக்குத் தமிழிலே எழுதியும், அப்பரடிகட்கு, "எண்ணும் எழுத்துஞ்சொல்" ஆகியும் "எட்டினோடிரண்டுமாக" மாணிக்கவாசகர்க்கும் "சொல்லும் பொருளுமென நடமாடி" அபிராமிபட்டருக்கும் அருள்பாலித்த எம்பெருமான் - பேரின்பப்பெரு வெளியில் களிநடம் புரியும் கண்ணுதல் எந்தையாம் பெண்ணொருபாகர், தமிழ் மரபிலே வந்துற்ற அந்தணர்தமக்கும் ஆரமுதாம் ஆற்ற இனிய தமிழ்மொழியிலேயே அருமறைகள் பலவும் பகர்ந்தருளியிருப்பாரேயன்றி வடமொழியிலா சாற்றியிருப்பார்? ஒருபோதும் வடமொழியிலே சாற்றியிரார். என் ஐயன் கண்ணுதல் எந்தை அருந்தமிழ் கொண்டே அருமறைகள் அந்தணர்க்குச் சாற்றினார் என்க.

மறை என்பது தமிழ் மறையே ஆகும். அந்தணர் கையிலிருந்த நூலும் தமிழ்நூலே எனத் தெளிக. தொல்காப்பியர், வேதம் என்றோ, ஆகமம் என்றோ குறித்தாரல்லர். மாறாக மறை என்றும் நூலென்றுமே குறித்துள்ளார். எனவே ஆதிக்காலந் தொட்டே வேள்விக்கும் அர்ச்சனைக்கும் ஆதிக்காலத்து அந்தணர் கொண்ட மொழி ஆதியாம் செந்தமிழே யென்பதை ஆன்றோர் ஆய்ந்து கண்டுகொள்க. ஆதிநாள் தொட்டே வழிபாட்டில் வழங்கிப் பயின்றுவந்த தமிழே இன்றும் என்றும் எல்லாவிடத்தும் பயிலத்தக்கதாகும் என்பதே திண்ணமாகும்.

கபிலர்பெருமான் தன்னைப் புலன் அழுக்கற்ற அந்தணாளன்" என்றே குறித்துக்கொண்டார். சமயச்சான்றோராகிய திருஞான சம்பந்தரையும் சுந்தர மூர்த்தியையும் அந்தணர் என்றே அறிகின்றோம். தமிழ் மரபுவழிப்பட்டவராக இருந்ததாலேயே

சம்பந்தர் தன்னைத் தமிழ்ஞான சம்பந்தன் என்று குறித்துக் கொண்டதோடு நின்றுவிடாமல் மக்கள் யாவரும் உய்யுமாறெண்ணி, "மந்திரமாவது நீறு" என்று உரைத்து அம்மந்திரப்பயன் யாவரையும் சென்றடைய வழிவகுத்தார். எனவே தொல்காப்பியரும் தெய்வத்திருவள்ளுவரும் நக்கீரரும் இன்னும் தமிழ்ச்சான்றோர் பலரும் குறித்துள்ள அந்தணர் என்பார் தமிழரே அவர் கற்றவையும் கையிலே வைத்திருந் தவையும் ஆகிய மறையும் நூலும் செந்தமிழேயாகும். செந்தமிழிலேயே வழிபாடு இயற்றினர் என்பதும் ஐயந்திரிபற விளங்குவதாகும்.

**பார்ப்பார்.**

நிறைவாகப் பார்ப்பாரைப்பற்றிச் சொல்லியே ஆகல் வேண்டும். தொல்காப்பியர் வள்ளுவர், இளங்கோவடிகள், நெட்டிமையார், ஆண்டாள் நாச்சியார் ஆகியோர் பார்ப்பாரைப்பற்றி உரைப்பர். வள்ளுவர் பார்ப்பாரைப்பற்றி

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். - ஒழுக்க:4

இல்லறவியலில் ஒழுக்கமுடைமையென்னும் அதிகாரத்திலே இவ்வாறாகக் கூறுகிறார். இல்லறத்தார்க்கு எப்போதும் பக்கத்துணையாக இருந்தனர். இருக்கவேண்டியவர்; பக்கத்துணையாகக் கொள்ளப்படவேண்டியவர் என்பதாலேயே வள்ளுவர் பார்ப்பாரை இல்லறவியலிலே வைத்தார். இல்லறத்திற்கு ஒழுக்கம் மிகமிக இன்றியமையாப் பண்பாகும். இங்கு "பார்ப்பான் ஒழுக்கம் குன்றப் பிறப்புக்கெடும்" என்று பொருள் கொள்ளவேண்டும். பார்ப்பான் பிறப்புக்கெட்டால் அவனை யாவரும் வெறுத்து ஒதுக்குவர். அதனால் தனி ஒருவனுக்கே இழப்பாகும். அதனால் நாம் இழந்துபடுதல் யாதொன்றுமில்லை. பார்ப்பான் ஒழுக்கம் குன்றல் ஆவது - பார்ப்பான் தன் கடமையினின்று தவறித் தன் கடமையைச் செய்யாது ஒழிதலாகும். அப்படி அவன் கடமையைச் செய்யத் தவறினால் தமிழ்க்குடிகளின் பிறப்பு - எதிர்காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் பிறப்பு தீயதாகி அதனால் எதிர்காலத் தமிழ்உலகே கெட்டழியும் என்பதாலேயே தெய்வத் திருவள்ளுவர் பார்ப்பானது ஒழுக்கத்திலே கவலைகொண்டார்.

அது எவ்வாறென்றால் நாளும் கோளும் பார்த்து நன்முழுத்த வேளையிலே கணவனும் மனைவியும் கூடினால், கருவிலேயே திருவை உடைய நல்ல பண்புடைய குழந்தைகள் பிறக்கும். 'நன் மக்களைப் பெறுதல்' என்னும் நூலிலே சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இதுபற்றி எழுதியுள்ளார். அதிவீரராமபாண்டியரும் 'கொக்கோக சாத்திரத்தில்' இன்ன நாள் மீனிலே கருவுற்றால் இன்ன நாள் மீனிலே குழந்தை பிறக்கும். அது இன்ன குழந்தை - அதாவது ஆண் அல்லது பெண் அது இத்துணையாண்டுகள் உயிர்வாழும். இன்ன துறையிலே அறிவிற்சிறந்து விளங்கும். இன்னின்ன குணநலன்களைப் பெற்றிருக்குமென ஓர் அட்டவணையே வரைவர். பார்ப்பார் என்பார் இயல்பாகவே இக்கலைநூலிலே திறம் பெற்றவராதலின் நாளும் கோளும் நன்முழுத்தமும் பார்த்துப் பார்த்து நன்மக்கட் பேற்றுக்கு உதவிய உயர்தமிழ்ப் பண்பாளர் என்பதாலேயே வள்ளுவர் பார்ப்பாரின் ஒழுக்கம்பற்றிக் கவலைகொண்டார். இங்கே அவர் 'ஒத்து' எனக் குறித்துள்ளதும் 'பிறப்பியல் கலைநூலை'யே ஆகும்.

இளங்கோவடிகளும் ஆண்டாள் அம்மையாரும் பார்ப்பார்தம் அருஞ்செயல் குறித்து விளக்குகின்றனர். இளங்கோவடிகள் மங்கள வாழ்த்துக்காதையிலே,

சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை -51-52

'கோவலன் கண்ணகியுடன் திருமணத்தின்போது தீவலம் வந்தான். அவ்வாறு தீவலம் வருவதற்கு மா முது பார்ப்பான் மறைவழி காட்டினான். இத்தகு கண்ணிறைந்த காட்சியைக் காண்பாரின் கண் என்ன நோன்பு செய்ததோ' வென்று இளங்கோவடிகளே வியந்தார். ஆண்டாள் நாச்சியாரும் பார்ப்பார் திருமணம் நிகழ்த்தியதை வாரணமாயிரத்திலே

நாற்றிசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்தன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழிநான் -4

என்று கூறுவார். பார்ப்பனச்சிட்டர் பலர் கூடி நீர்கொணர்ந்து காப்புநாண் கட்டுதல் முதலாய திருமணச் சடங்குகளை நிகழ்த்தியமை குறிப்பிடப்படுகிறது. இளங்கோவடிகள் 'மா முது பார்ப்பான்' என்பதால் திருமணச் சடங்குகளை பார்ப்பாரில் முதியவரே நிகழ்த்துதல் என்பது தமிழ்மரபு என்பது தெளிவாகும். ஆக, திருமணத்தை, அருமறைப்படி செய்துவைக்கும் கடமை பார்ப்பாருடையதென்பது தெளிவாகின்றது. இத்துடன் பார்ப்பார் கடன் தீர்ந்துவிட்டதா என்றால் இல்லை. தலைமக்களை இல்லறத்திலே இணைத்துவைத்த பிறகே பார்ப்பாரின் அருங்கடன் தொடங்குகிறது. இதனைத் தொல்காப்பியனார்,

காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செல்வுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு குரிய -பொருள்:4கற்பு:36

என்று, இல்லறத்திலே ஈடுபட்ட தம்பதியர்க்கு இல்லறம் நடத்துதலிலே அறிவுரைத்து நெறிப்படுத்து மாற்றைக் கூறவர். கணவன் மனைவியர்தம் காமநிலையுணர்ந்து தக்கவாறு உரைத்தல்; கணவன் குறிப்பறிந்து மனைவிக்குக் கூறுதல்; பசு முதலாய உயிரிகளின் வாயிலாக நிமித்தம் - சகுணங்கண்டு நல்லனவெனின் ஒப்புதலும் தீயதெனில் மறுப்புங்கூறி அதன்படி நடக்கச்செய்தலும் ஆகிய இவைபோன்றுள்ள இல்லற நிகழ்வுகளைப் பார்ப்பார் நிகழ்த்தி அருங்கடனிறுத்தனர். கணவன் மனைவியர் உடலுறவு கொள்ளல் ஆகாது என்னுங் காலத்தில் இரவுப்பொழுதிலே அவர்தமக்கு உற்ற துணையாக அவர்தம்மோடு இருந்து பேணிக்காத்தனர். இச்செயலில் ஆணுக்குத் துணையாகப் பார்ப்பனத்தோழனும், பெண்ணுக்குத் துணையாகப் பார்ப்பனத்தோழியும் அவர்தம்மோடு உடன் உறைந்தனர் என்பது பார்ப்பனத்தோழன், பார்ப்பனத்தோழி என்னும் வழக்குகளால் அறியப்பெறும் உண்மையாகும். அத்துடன், ஐயர், அந்தணர் என்பாரில் ஆண்களேயன்றிப் பெண்பாலர் அக்கடமைகளில் ஈடுபடவில்லையென்பதும், பார்ப்பாரிலேயே ஆண்பெண் இருபாலரும் அக்கடமைகளில் ஈடுபட்டனர் என்பதும், அறியக்கிடக்கும் உண்மையாகும்.

(தொடரும்)

பதிப்பாசிரியர்.

## பேராசிரியர். இரா. சதாசிவம்

### ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா